# சுபீட்சம்

சுபீட்சம் SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சனிக்கிழமை 04.02.2023 supeedsam.com supeedsam@gmail.com






X உள்ளூராட்சி மன்றத் தேர்தல்– 2023

தலைவர் காட்டிய சின்னம்!
தமிழர் மனங்களில் திண்ணம்!

தமிழ் அரசுக்கட்சி
மட்டக்களப்பு மாவட்டம்


# தமிழ் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் அனைத்தும் ஐக்கியப்பட்டு ஒன்று சேருமாறு ஐக்கிய அமெரிக்க தமிழ்ச் செயற்குழு (USTAG) கோரிக்கை

இலங்கையில் உள்ள சகல தமிழ் கட்சி தலைவர்கள் மற்றும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஐக்கிய அமெரிக்காவில் செயல்படும் ஐக்கிய அமெரிக்க தமிழ்ச் செயற்குழுவின் (USTamil Action Group & USTAG) தலைவர் அனன் பொன்னம்பலம்

02 ஆம் பக்கத்தில்...

USTAG United States Tamil Action Group

## பண்டா- செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்படுவதற்கு காரணமான மகாநாயக்கர்களே இன்றும் முட்டுக்கட்டையாக இருக்கின்றார்கள். - ஸ்ரீநேசன்



அன்று பண்டா செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப் படுவதற்கு காரணமான மகாநாயக்கர்களே, இன்று மாகாண சபைகளுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கும் விடயத்திலும் தடையாக இருக்கின்றார்கள் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் விசனம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமாசிங்க மகாநாயக்கர்களை சந்தித்தபோது மாகாண சபைக

02 ஆம் பக்கத்தில்...

## 75ஆவது தேசிய சுதந்திர தின விழாவுக்கு அமெரிக்க ஜனாதிபதி வாழ்த்து




இலங்கையின் 75ஆவது தேசிய சுதந்திர தின கொண்டாட்டத்துடன் இணைந்ததாக இலங்கைக்கும் அமெரிக்காவிற்கும் இடை

02 ஆம் பக்கத்தில்...

## ஊழல் மோசடிகளுக்கு உடந்தையாகவுள்ள உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்படுகின்றன?

ஊழல் மற்றும் மோசடிகளில் ஈடுபடும் உள்ளூராட்சி சபைகளை உடனடியாக கலைக்க மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தீர்மானித்துள்ளது.

சில உள்ளூராட்சி சபைகள் தொடர்பான ஊழல், மோசடி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், அவை தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு



02 ஆம் பக்கத்தில்...

## மார்ச் 9ஆம் திகதி உள்ளூராட்சிமன்ற தேர்தல் நிச்சயம் நடத்தப்படும் - பஷில்



மார்ச் 9 ஆம் திகதி உள்ளூராட்சிமன்ற தேர்தல் நிச்சயம் நடத்தப்படும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரான பஷில் ராஜபக்ஷ, அனைத்து தொகுதி அமைப்பாளர்களுக்கும்


02 ஆம் பக்கத்தில்...






## தமிழர்களுக்கு இன்றைய நாள் இருள் தினமாகும்

**சாணக்கியன்!**



இலங்கையின் சுதந்திர தினமான நாளைய தினம் தமிழருக்கு இருள் தினமாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வெள்ளிக்கிழமை(03) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தில் நாளைய தினம் காலை 9 மணிக்கு அனைவரையும் ஒன்றுகூடுமாறும் அவர் பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார்.

எமது இனத்தின் சுதந்திரத்துக்காக ஒன்றுகூடுவோம் என தெரிவித்துள்ள அவர், எமது மக்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள அனைவரையும் வருகை தருமாறும் அவர் தெரிவித்துள்ளார்.


MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்



கல்வியே துணை

பள்ளித் தலைமனைத்தும் பேறெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா–வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல
Deutsch, Franzósisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH
Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO




Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302
Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com

finma :34598 25605: cicero

# கல்முனைக்கு நிரந்தரமாக பிரபல இருதய நோய் நிபுணர் நியமனம்!

(வி.ரி. சகாதேவராஜா)






கல்முனை ஆதார வைத்தியசாலையில் சிறப்பாக இயங்கிவரும் இருதய நோய் சிகிச்சைப்பிரிவிற்கு தற்போது புதிய இருதய நோய் நிபுணராக பிரபல வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி டாக்டர் ககன் துசியந்த லொகுகெடகொட நியமிக்கப்பட்டுள்ளார்.

கிரிபெத்ஹொடையை பிறப்பிடமாக கொண்ட இவர் வைத்தியத்துறைக்கு 2014.12.02 ஆம் திகதி முதல் நியமனம் பெற்றார். மேலும் தேசிய வைத்தியசாலை இலங்கை சிரேஷ்ட மருத்துவ பதிவாளராகவும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர போதனா வைத்தியசாலையில் இருதயவியல் துறையின் சிரேஷ்ட பதிவாளராக கடமையாற்றியிருந்தார். தற்போது இடமாற்றம் பெற்று கல்முனை ஆதார வைத்தியசாலையில் இருதய நோய் நிபுணராக கடமையேற்றுள்ளார்.

இவர் ஓர் சிறந்த இருதயநோய் நிபுணராவார். கல்முனை ஆதார வைத்தியசாலையின் இருதய நோய் சிகிச்சைப்பிரிவானது பல்வேறுபட்ட வசதிகளுடன் காணப்படுகின்றது. இங்கு 2D ECHO, Exercise ECG, 24 Hours Holder Monitoring, Cardiology Clinic, Refer for Angiogram போன்ற வசதிகளும் காணப்படுகிறது.

இந்த இருதய நோய் சாய்சாலையில் மாதந்தோறும் கிட்டத்தட்ட 400 நோயாளிகள் வருகை தருகின்றனர்.

கடந்த ஆண்டு மட்டும் 3800 இற்கு அதிகமான நோயாளிகள் இவ் இருதயநோய் கிளினிக்கிற்கு வருகைதந்துள்ளனர்.

இது மட்டுமல்லாமல் கல்முனை தொடக்கம் பொத்துவில் வரை கல்முனை தொடக்கம் வெல்லாவெளி வரை மற்றும் வெளி மாவட்டங்களிலும் இருந்து நோயாளிகள் இவ்வைத்தியசாலை இருதய நோய் சிகிச்சை மூலம் பயன்பெறுவதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த மார்கழி மாதம் தொடக்கம் இன்றுவரையில் கிட்டத்தட்ட 48 நோயாளிகள் Angiogram பரிந்துரைக்காக வேறு வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். மேலும்கடந்த ஆண்டு ஒவ்வொரு மாதமும் 100 இற்கு மேற்பட்ட நோயாளிகள் Echo செய்து பார்ப்பதற்காக வருகை தருகின்றனர். இவ்வாறு பல்வேறுபட்ட வசதிகளுடன் திகழும் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் இருதயநோய் சிகிச்சைப்பிரிவு கல்முனை பிராந்தியம் மட்டுமல்லாமல் வெளி மாவட்டங்களில் நோயாளிகளுக்கும் தனது மகத்தான மருத்துவ சேவையை வழங்குவது குறிப்பிடத்தக்கது.

# நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் வாகரை விஜயம்





(ந.குகதர்சன்)

நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாமல் லியனகே (Namal Liyanage), குழந்தைகள் பாதுகாப்புத் தலைவர், யுனிசெஃப் ஆண்ட்ரூ ஆலோசகர் மிராண்டா ஆம்ஸ்ட்ராங் (Miranda Amstrong - chief of child protection, Andrew- consultant UNICEF) ஆகியோர் வாகரை பிரதேசத்திற்கு வருகை தந்தருந்தனர்.

பிரதேச செயலாளர் எந்திரி. க. அருணன் தலைமையில் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் அ.அழகுராஜ் ஒருங்கிணைப்பில் பிரதேச சிறுவர் சபை சிறார்களால் வரவேற்கப்பட்டார்கள்.

இவ் விஜயத்தின் போது ஏற்கனவே யுனிசெஃப் அனுசரணையுடன் ககஇ நிறுவனத்தினால் வழங்கப்பட்ட 30 நலிவுற்ற குடும்பங்களுக்கு 40000/= ரூபாய் பெறுமதியான உலர் உணவு, கற்றல் உபகரணங்கள் மற்றும் 07 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டதை பார்வையிட்டதுடன், அதன் முன்னேற்றத்தினையும் களவிஜயம் ஊடாக பார்வையிட்டு பாராட்டுகளை தெரிவித்திருந்தனர்.

சிறுவர் பெண்கள் பிரிவு ஊடாக வாகரை பிரதேச சிறுவர் பாதுகாப்பு செயற்பாடுகள், எதிர்நோக்கும் பிரச்சனைகள், சவால்கள் என்பன தெளிவுபடுத்தப்பட்டது .

இந்நிகழ்வில் சிறுவர் நன்னடத்தை பொறுப்பாளர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், முன்பிள்ளைபருவ, அபிவிருத்தி உத்தியோகத்தர், உளவளதுனை உத்தியோகத்தர், சிறுவர்சபை சிறார்கள், என பலரும் கலந்து கொண்டனர் .

# சுதந்திர தின நிகழ்வில் கிழக்கு ஆளுனர் அனுராதா யஹம்பத்





(ஹஸ்பர்)

ஐக்கியமான தேசமொன்றை கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டிய காலம் ஏற்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபையின் ஏற்பாட்டில் 75 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட இஸ்லாமிய சமய விசேட துஆ பிரார்த்தனை மற்றும் வழிபாட்டு நிகழ்வு (02) அனுராதபுர சந்தி அல்ஹுலூர் ஜும்மா பள்ளிவாசலில் நடைபெற்றது.

இதன்போது பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே கிழக்கு மாகாண ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் காலணித்துவ வாதிகள் எமது நாட்டை தம் நலனுக்காகவே பயன்படுத்தினார்கள். நாம் எந்தவொரு நாட்டுக்கும் அடிபணிந்து செயற்பட வேண்டிய அவசியம் கிடையாது. சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகளை கடக்கவுள்ளபோதும் 2500 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றை கொண்ட தேசமே எமது நாடு. அன்று சுதந்திரத்திற்காக அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட்டார்கள். ஐக்கியம் மற்றும் ஒருமித்த தேசத்தை கட்டியெழுப்பி வளமான தேசமாக எமது நாட்டை கட்டியெழுப்ப திடசங்கற்பம் பூணல் வேண்டும்.எந்த மதத்தவறாயினும் மனிதாபிமாப்பண்பு கட்டியெழுப்பப்படல் வேண்டும். ஒருவரது மதத்தை மற்றவர் மதித்து செயற்படல் வேண்டும். தற்போது பொருளாதார நெருக்கடியில் உள்ள எமது தாய் நாட்டை அதிலிருந்து விடுபட்டு வலுவான தேசமாக மாற்ற அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படல் காலத்தின் தேவையாக அமையப்பெற்றுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

பல நூறு வருடகாலமாக எமது நாடு காலணித்துவ வாதிகளின் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டது. நாட்டின் சுதந்திரத்திற்கு சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் அன்று பங்களிப்பினை வழங்கினார்கள். காலணித்துவ வாதிகளிலிருந்து சுதந்திரம் கிடைக்கப்பெற்றாலும் பொருளாதார ரீதியான சுதந்திரத்தை பெற்றுக்கொள்ள தற்போதும் முயற்சித்துக்கொண்டே இருக்கின்றோம். நாம் குறைந்தபட்சமாவது 100 வது சுதந்திர தினத்தை கொண்டாடுகின்ற போதாவது பொருளாதார ரீதியாக உலகில் விருத்தியடைந்த தேசமாக மாற அவசியமானவற்றை ஏற்படுத்திக்கொள்ளல் வேண்டும் என இதன்போது திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மௌலவிமார்கள், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர். எம். பி. எஸ். ரத்னாயக்க, கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், மத்ரசா மாணவர்கள், பிரதேசவாசிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# சிவனடிபாத மலையை தரிசனம் செய்துவிட்டு திரும்பிய வயோதிபர் மரணம்

(வாஸ் கூஞ்ஞ)

சிவனடிபாத மலைக்குச் தரிசனம் செய்துவிட்டு திரும்பிய வயோதிபர் திடீரென சுகவீனமுற்ற நிலையில் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோதும் சிகிச்சை பலனின்று உயிர் இழந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இவ் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது கல்கிசை பகுதியில் இருந்து சிவனடிபாத மலைக்கு தரிசனம் செய்ய வந்த 89 வயதுடைய நிஷாந்த கல்தேரா என்ற வயோதிபர் சிவனடிபாத மலையை தரிசனம் செய்துவிட்டு வியாழக்கிழமை (02) அதிகாலைவேளையில் திரும்பிக் கொண்டு இருந்தவேளையில் ரத்து அம்பலம என்ற இடத்தில் திடீரென கடும் சுகவீனமுற்றுள்ளார்.

இதை அறிந்த நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொலிசார் சுகவீனமுற்ற இவ் நபரை உடன் ஒரு அம்புலன்ஸ் வண்டி மூலம் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இவரை இவ்வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டபோதும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் மரணத்தை தழுவிக் கொண்டார்.

இறந்தவரின் சடலம் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் உள்ள பிரேத அறையில் வைக்கப்பட்டு உள்ளது எனவும் பிரேத பரிசோதனையின் பின்னர் அவரது சடலம் அவரது உறவினர்கள் எடுத்து செல்ல உள்ளதாக நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் கடந்த சில நாட்களாக கடும் குளிரும் மழையும் அத்துடன் பணி மூட்டமும் அதிகளவு காணப்பட்டு வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது

## 75ஆவது தேசியசுதந்திர...

யிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தவும் விஸ்தரிக்கவும் எதிர்பார்ப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

75ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும், இலங்கை மக்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்தவாறு அமெரிக்க ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினை சந்தித்த, அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான உப இராஜாங்கச் செயலாளர் விக்டோரியா நூலண்டினால் ஜனாதிபதியிடம் இந்த வாழ்த்துச் செய்தி கையளிக்கப்பட்டது.

இரு நாட்டு மக்களின் அமைதியான, வளமான மற்றும் பாதுகாப்பான எதிர்காலத்திற்காக, அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவையும் தொலைநோக்கையும் தொடர்ந்து பேணுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் ஜோ பைடன் இந்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் %5ஆவது தேசிய சுதந்திரக் கொண்டாட்டத்துக்கு இணையாக அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளுக்கும் %5 ஆண்டுகள் நிறைவடைவதாகவும், இந்த நீண்டகால உறவு பிராந்திய மற்றும் உலகளாவிய அமைதி மற்றும் சுபீட்சத்தை மேம்படுத்த உதவும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

காலநிலை மாற்றத்திற்கு எதிராகப் போராடுவது, மனிதக் கடத்தலைத் தடுப்பது மற்றும் பாதுகாப்பான, சுதந்திரமான மற்றும் திறந்த இந்து-பசுபிக் பிராந்தியத்தை பேணுவது உள்ளிட்ட விடயங்களில் வரலாறு முழுவதும் உலகளாவிய பாரிய சவால்களை இரு நாடுகளும் எதிர்கொண்டதாக ஜோ பைடன் நினைவு கூர்ந்துள்ளார்.

ஜனநாயக நாடுகள் என்ற வகையில் இலங்கைக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உறவு ஒற்றுமை, சுதந்திரம் மற்றும் சமத்துவத்தின் ஊடாக மேலும் வலுவடைவதாக பைடன் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஊழல் மோசடிகளுக்கு...

வருவதாகவும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கம்புர தெரிவித்துள்ளார்.

விசாரணைகள் நிறைவடைந்த உள்ளூராட்சி சபைகள் தொடர்பான அறிக்கையை வழங்குமாறு புலனாய்வுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கமைவாக உள்ளூராட்சி மன்றங்களைக் கலைப்பதற்கு சட்ட ஆலோசனை மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். கடந்த நான்கு வருடங்களில் பல உள்ளூராட்சி சபைகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அதற்கமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கமைய விசாரணைகள் நிறைவடைந்த உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். உள்ளூராட்சி சபைகளை கலைக்கும் அதிகாரம் மாகாண ஆளுநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், அதற்கமைவாக ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான உள்ளூராட்சி சபைகளை கலைப்பது தொடர்பாக ஆளுநர்களுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி சபைகளின் தலைவர் அல்லது மேயர் மாத்திரம் மோசடி மற்றும் ஊழல் செய்திருந்தால் அவர் பதவியில் இருந்து நீக்கப்படுவார் என்றும், முழு சபையின் அங்கீகாரத்துடன் ஊழல் மோசடி இடம்பெற்றிருந்தால், முழு சபையுமே கலைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மார்ச் 9ஆம் திகதி...

தெரிவித்துள்ளார் என இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த கூறியுள்ளார்.

எனவே அதனை எதிர்கொள்வதற்கு தயாராகுமாறு பஷில் ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற சந்திப்பின் போதே இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

## தமிழ் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகள்...

அவர்களால் கையொப்பமிடப்பட்டு அனுப்பியுள்ள கடிதத்திலே மேலுள்ளவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

எந்த விதிவிலக்குமின்றி தமிழ் அரசியலில் ஒற்றுமை என்பது முற்றிலும் இன்றியமையாததாக இருக்கும் இவ்வேளையில் தலைமை அதற்கு நேர்மாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது என்ற செய்தியால் உலகெங்கிலும் உள்ள புலம்பெயர் தமிழர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் தொடர்ந்து துண்டாடப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடைய ஐக்கியத்தை மீண்டும் நிறுவ முடியும் என்ற முன்மொழிவு ஒரு ஆபத்தான மற்றும் பொறுப்பற்ற அனுமானமாகும். தனித்துச் செல்லும் ஒவ்வொரு தமிழ்க் கட்சிகளும் தேர்தலுக்குப் பிறகு ஒற்றுமை என்ற நோக்கத்திற்காக பேசுவதற்கு எந்தத் தமிழ்ப் பிரதிநிதித்துவமும் இல்லாத அளவுக்கு அழிவுகரமான முறையில் தமிழ் வாக்குகளைப் பிரித்துவிடும்.

இதில் மிகவும் வயிற்றெரிச்சலுக்கும் வெட்கப்பட வேண்டியதுமான விடயம் என்னவெனில் தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று இலங்கைப் பிரதமர் அறிக்கை வெளியிடுவதைப் பார்க்கும் போதும் மேலும் இந்த பிளவுக்கு மத்தியில் இந்திய வெளிவிவகார அமைச்சர் தமிழ் கட்சித் தலைவர்களைச் சந்திப்பதை ஒரு குறியீடாகக் காட்டியமையும் குறிப்பிடத்தக்கது.

புலம்பெயர் தமிழ் மக்களாகிய நாம் அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒன்றுகூடி தற்போதைய துர்ப்பாக்கிய உத்தியை மறுபரிசீலனை செய்யுமாறும் அதற்குப் பதிலாக அனைத்துக் கட்சிகளின் ஒரே தமிழ்த் தேசியக் கூட்டமைப் (TNA) ஆக ஒன்றிணையுமாறும், இதற்காக ஐக்கிய முன்னணியின் நோக்கத்திற்காகவும் பலத்திற்காகவும் நாம் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். குறிப்பாக உள்ளாட்சி தேர்தல். மேலும், மாகாணசபைத் தேர்தல்களிலும் பாராளுமன்றத் தேர்தல்களிலும் எமது மக்கள் விரும்புவது இந்த ஒற்றுமையைத்தான். நிரந்தர அரசியல் தீர்வு பற்றி இலங்கை அரசாங்கமும் சர்வதேச சமூகமும் பேசிக் கொண்டிருக்கும் காலத்தின் தேவை இதுவாகும்.

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு. நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே. (இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது மகாகவி பாரதியார் பாடிய பாடல்). நமது மக்களின் நல்வாழ்வு கண்ணியம் மற்றும் சுதந்திரமான தேர்வு ஆகியவை நமது தலைமையின் முதன்மையான குறிக்கோளாக இருக்கும்போது ஒற்றுமை அடையப்படும் என்பது எங்கள் உறுதியான நம்பிக்கை.

எங்கள் மக்களின் உண்மையான அபிலாசைகளை பிரதி நிதித்துவப்படுத்துவதற்காக நீங்கள் எங்கள் வேண்டுகோளை காலத்தின் தேவை கருதி அதிக முக்கியத்துவம் கொடுத்து கருத்தில் எடுத்துக்கொள்வீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். என அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பண்டா- செல்வா ஒப்பந்தம்...

ளுக்கு அதிகாரங்களை வழங்கக் கூடாது விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் வெள்ளிக்கிழமை மாலை (03) ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், சுதந்திரத்திற்கு முன்பாக இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வை தரப் போவதாகவும், அதன் ஒரு அம்சமாக 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுலாக்கம் செய்யப்போவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

இருந்தபோதும், நேற்று முன்தினம் ஜனாதிபதி அவர்கள், மகாநாயக்க தேரர்களை சந்தித்த போது, 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த கூடாது என்றும் குறிப்பாக காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்கக் கூடாது என்றும் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து தொடர்ந்து 75 ஆண்டுகளாக இனப்பிரச்சனைக்கான தீர்வுகளை எட்டுவதற்கான பல்வேறுபட்ட ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள், பேச்சுவார்த்தைகள் என்பன முன்னெடுக்கப்பட்டாலும், அவை அனைத்தும் பேரினவாத சக்திகளினால் தடைப்படுத்தப்பட்டே வந்திருக்கின்றன. அந்த வரிசையில் தற்போது 13ஆவது திருத்தத்தை கூட முழுமையாக அமுல்படுத்தக் கூடாது எனும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தினால் தமிழர்களுக்கு தீர்வு கிட்டாது என்பதும், உள்நாட்டு பொறிமுறைகள் மூலமாக இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது அதனால் சர்வதேச பொறிமுறை ஒன்று தான் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரேவழி எனும் விடயம் மகாநாயக்கர்களின் இந்த கருத்தின் ஊடாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

1956ஆம் ஆண்டில் பண்டா செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்படுவதற்கும், தற்போது மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை வழங்கும் விடயத்திலும் இதே மகாநாயக்கர்கள் தான் தடையாக இருக்கின்றார்கள். காரணமாக இருந்தார்கள். எனவே உள்நாட்டு பொறிமுறை என்பது ஏமாற்று வித்தையாகவே அமைந்துள்ளது.

இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் தமிழ் மக்களின் இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கு உரிய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என இவ்வேளையில் கேட்டுக் கொள்கின்றேன். என தெரிவித்தார்.

# 5 கோடி ரூபா நிதியில் மருத்துவ நிலையம் திறந்து வைப்பு!

(அபு அலா)

லண்டன் Benefit Mankind நிறுவனத்தினால் 5 கோடி ரூபா நிதியின் கீழ் கிண்ணியா பூவரசடித்தீவில் நிர்மானிக்கப்பட்ட மருத்துவ நிலையம் (01) திறந்து வைக்கப்பட்டது.

அல்-மினா மகா வித்தியாலய அதிபர் எம்.வை. ஹதியத்துல்லாஹ் தலைமையில் இடம்பெற்ற இந்த திறப்பு விழாவுக்கு, திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் வி.எச்.என்.ஜயவிக்ரம மற்றும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதரன் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்துகொண்டு மருத்துவ நிலையத்தை திறந்து வைத்தனர்.

நெடுந்தீவு, சமாவச்சந்தித்தீவு, ஈச்சந்தீவு, பூவரசடித்தீவு, ஆளங்கேணி போன்ற கிராமங்களில் வசிக்கின்ற மக்கள் இக்கிராமம் உருவாக்கப்பட்ட காலம்தொட்டு மருத்துவ சேவைகளை பெற்றுக்கொள்வதில் பல கஷ்டங்களை எதிர்கொண்டு வந்துள்ளனர். இவர்கள்





மருத்துவ சிகிச்சைகளை பெற்றுக்கொள்வதாக இருந்தால் சுமார் 30 கிலோ மீற்றர் தூரம் சென்று வரவேண்டும். அவ்வாறு செல்கின்ற வீதிகள் யாவும் குண்றும் குழியுமாக காணப்படுகின்றதும் பெரும் கவலைக்குரிய விடயமாகவும், வாகன போக்குவரத்து அற்ற நிலைமையிலும் வாழ்ந்து வந்துள்ளனர்.

குறிப்பாக, இங்கு வசிக்கின்ற மக்கள் அவசர சிகிச்சையை பெற்றுக்கொள்ள பாரிய சவால்களையும் எதிர்கொண்டே வந்துள்ளனர். இந்நிலைமையை கருத்திற்கொண்ட அல் ஹிக்மா நிறுவனத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர்வைத்திய கலாநிதி அப்பாஸ் இபாதுல்லாஹ், இக்கிராம மக்களின் நிலைமைகளைப் பற்றி லண்டன் Benefit Mankind நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வைத்தியர் ஹாபீஸ் அப்துஸ்சமட் முல்லாஹ்வின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து இந்த தனியார் மருத்துவ நிலையம் நிர்மானிக்கப்பட்டு நேற்றயதினம் பொதுமக்கள் பாவனைக்கு கையளித்து வைக்கப்பட்டது.

இவ்விழாவுக்கு, லண்டன் Benefit Mankind நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வைத்தியர் ஹாபீஸ் அப்துஸ்சமட் முல்லாஹ் மற்றும் றிஸ்வான் ஹர்தா, கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் மாகாண சமூகநல மருத்துவ ஆலோகர் வைத்தியர் எஸ்.அருள்குமரன், கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.கணி, மூதூர் தள வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர் ஆர்.ரோஹான் குமார், குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எம். எம்.அஜித் உள்ளிட்ட பல அதிதிகளும், பொதுமக்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# முன்மாதிரியான இளைஞர்கள் பசுமையான இலங்கை திட்டம் ஏறாவூரில் ஆரம்பித்து வைப்பு





(வ.சக்திவேல்)

நாட்டின் 75வது சுதந்திர தினத்தை முன்னிட்டு முன்மாதிரியான இளைஞர்கள் பசுமையான இலங்கை திட்டம் ஏறாவூரில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக இளைஞர்சேவை உத்தியோகத்தர் ஏ.டபிள்யூ. இர்சாத் அலி தெரிவித்தார்.

இளைஞர் விளையாட்டு அமைச்சின்கீழ் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வழிகாட்டலில் ஏறாவூர் நகர பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் மேற்படி நிகழ்வு ஏறாவூர் நகரில் வெள்ளிக்கிழமை 03.02.2023 இடம்பெற்றது.

ஏறாவூர் அல்முனீறா மகளிர் மகா வித்தியாலய சூழமைவு வளாகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் வி. நிஹாறா, பிரதேச உதவிச் செயலாளர், ஏறாவூர் பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் ஏ.எச்.ஏ. காரியப்பர், ஏறாவூர் நகரசபைச் செயலாளர் எம்.எச்.எம். ஹமீம் பாடசாலை அதிபர் என்.எம். மஹாத் உட்பட இன்னும் அலுவலர்கள் கலந்து கொண்டு துப்பரவாக்கல் மற்றும் மரம் நாட்டும் பணிகளை ஆரம்பித்து வைத்தனர்.

நிகழ்வைத் துவக்கி வைத்து உரையாற்றிய ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் நிஹாறா பசுமையான நகரம் எனும் தொனிப்பொருளின் கீழ் ஏறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவில் பல்வேறு வேலைத் திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றோம். இதனை இன்னுமின்னும் சிறப்பாக முன்னெடுத்து பசுமையான நகரமாக உருவாக்குவதற்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

பசுமையான இலங்கை திட்டத்தின் கீழ் ஏறாவூரில் ஒரு வார காலத்திற்கு தொடர்ச்சியான சிரமதான துப்புரவுப் பணிகளும் மர நடுகையும் இடம்பெறவிருப்பதாக இளைஞர் சேவை உத்தியோகத்தர் இர்சாத் அலி தெரிவித்தார்.

# கிழக்கின் முதலாவது உளுந்து தோல் நீக்கும் இயந்திரம் தங்கவேலாயுதபுரத்தில் அம்பாறை அரச அதிபர் டக்ளஸ் திறந்து வைப்பு!

(வி.ரி. சகாதேவராஜா)

கிழக்கிலங்கையின் முதலாவது உளுந்து தோல் நீக்கும் இயந்திரம் திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள தங்கவேலாயுதபுரத்தில் அம்பாறை அரச அதிபர் டக்ளஸினால் திறந்து வைக்கப்பட்டது.

திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரனின் அயராத முயற்சியால் இவ் இயந்திரம் பல லட்ச ரூபாய் செலவில் பெறப்பட்டுள்ளது.

இவ் இயந்திரம் கிழக்கு மாகாணத்தில் திருக்கோவில் பிரதேசத்தில் மட்டுமே உள்ளது .



பிரதேச செயலாளர் அவர்களின் நெறிப்படுத்திலின் ஊடாக திட்டமிடல் பிரிவின் கீழ் சௌபாக்கிய வேலைத்திட்டத்தின் கீழ் இவ் இயந்திரம் பெறப்பட்டுள்ளது.

இவ் வேலை திட்டத்தினை கடந்த செவ்வாய்க்கிழமை(31) அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் வைபவ ரீதியாக ஆரம்பித்தது வைத்தார்.

இவ் நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன், உதவி பிரதேச செயலாளர் .க.சதிசேகரன் ,மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி.அனஸ் மற்றும் திட்டமிடல் பணிப்பாளர் எம்..அனோஜா மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் திருக்கோவில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# நெல்,சோளம் செய்கைக்காக யூரியா உரம் பத்து பில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கு நடவடிக்கை

## விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர





ஒரு இலட்சம் மெற்றிக் தொன் யூரியா உரத்தை கையிருப்பில் வைத்துக் கொண்டு, சிறுபோகத்தில் நெல், சோளம் மற்றும் ஏனைய பயிர்ச் செய்கைகளுக்கான யூரியா உரம் பகிர்ந்தளிப்பது நோக்கமாகும். சிறுபோக நெற் செய்கைக்காக சேதனப் பசளை, பண்டி, யூரியா உர வகைகளை,தட்டுப்பாடின்றி விவசாயிகளுக்கு வழங்குவது விவசாய அமைச்சின் எதிர்பார்ப்பாகும்.

எதிர்வரும் சிறுபோகத்தின் போது, நெல் மற்றும் சோளம் செய்கைக்காக யூரியா உரத்தை கொள்வனவு செய்வதற்கு பத்து பில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, அமைச்சின் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். தற்போது, உர மற்றும் வர்த்தக உர நிறுவனங்களுக்கு சொந்தமான களஞ்சியசாலைகளில் 30ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரம் காணப்படுகிறது. அதனைத் தவிர, மேலும் 25 ஆயிரம்மெற்றிக் தொன் யூரியா உரம் கொள்வனவு செய்யப்படவுள்ளது. இதற்கென பத்து பில்லியன் ரூபா ஒதுக்கப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

ஆரம்ப உரமான சேதனப் பசளை, சிறுபோகத்தின் ஆரம்பத்திலேயே விவசாயிகளின் தேவைக்கேற்ப,முழுமையாக இலவசமாக வழங்கப்படவுள்ளது. 36ஆயிரம் மெற்றிக் தொன் உரத்தை ஏற்றிய கப்பல் இந்த மாத நடுப்பகுதியில் துறைமுகத்தை வந்தடையவுள்ளது.

மேலதிகமாக, 35ஆயிரம் மெற்றிக் தொன் MOP உரம், உர நிறுவனத்திடம் காணப்படுகிறது. அதன்படி, சிறுபோகத்தில் நெல் வயல்களுக்கு தேவையானஉரத்தை தட்டுப்பாடின்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்தார்.

# ஆட்சியாளர்கள் இனவாதத்தை உருவாக்கி ஆட்சிக்கு சென்றனர்







பாறுக் ஷிஹான்

தேர்தல் காலம் அரிசி,பணம் கொடுக்கும் வகையில் அரசியல் நாம் செய்யவில்லை நாம் நாட்டை கட்டியெழுப்பக்கூடிய மாற்றத்தை உருவாக்க கூடிய வகையில் செயற்படுகிறோம், அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக இருக்க செயற்படுவோம். பழைமைவாத அரசியலை இல்லாமல் செய்து புதிய அரசியல் பயணத்துடன்பயணிக்க திசைகாட்டியுடன் பயணியுங்கள் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் பொதுக் கூட்டம் சாய்ந்தமருது கடற்கரையில் ,புதன்கிழமை (01)தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினரும்,கல்முனை தொகுதி அமைப்பாளருமான ஏ.ஆதம்பாவா தலைமையில் இடம்பெற்றது.

கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாறறுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

பிள்ளைகளுக்கு நல்ல கல்வி இருக்கின்றதா? வைத்தியசாலையில் மருந்துகள் தட்டுப்பாடு, விவசாயிகளுக்கு விவசாயம் செய்ய போதியளவு உரம் இல்லை,விவசாயம் செய்ய வளம் இருந்தும் வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்கின்றார்கள். இவையெல்லாம் வாக்களித்த மக்களுக்கு அரசாங்கம் என்ன செய்தது? என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும்

தேர்தல் காலம் வாக்குகளை பெறுவதற்காக சிங்கள தலைவர்கள் சிங்களவர்கள் பகுதிகளுக்கு சென்று இனவாதத்தை விதைத்து வாக்குகளை பெறுகின்றனர் அதே போல் முஸ்லிம் தலைவர்கள் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளுக்கு சென்று இனவாதத்தை விதைத்து வாக்குகளை பெற்று வெற்றி பெற்று அங்கே இவர்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்கின்றனர்.


ஆட்சியாளர்கள் இனவாதத்தை உருவாக்கி ஆட்சிக்கு சென்றனர், இதன் மூலம் என்ன நடந்தது?தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த நாம் செயற்படுவோம் ஒற்றுமையை ஏறபடுத்த திசைகாட்டியால் மாத்திரம் முடியும் மாலைதீவில் கடல் வளத்தை கொண்டு முன்னோக்கி சென்றுள்ளனனர்,எமது நாட்டில் ஆட்சியாளர்கள் என்ன திட்டங்களை செய்து இருக்கின்றனர் ? நாட்டின் சுற்றுலாத் துறை,விவசாயம், கடல் வளம் , கணியம் , உட்பட ஏனைய வளங்களைப் சரியாக பயன்படுத்தி நாம் நாட்டை கட்டியேழுப்புவோம்.

ஒலுவில் துறைமுகத்தில் அதிக பணம் செலவழித்தும் கூட கப்பல் எதுவும் வரவில்லை மீனவர்களுக்கும் இறுதியில் பயன் இல்லை ஹக்கீம்,ரிசாத்,ஹரீஸ்,மகிந்த,ரணில் ஆகியோர் தமது பிரச்சினையை மட்டுமே தீர்த்து கொள்கின்றனர் ஆனால் அவர்களால் மக்களுக்கான தீர்வுகள் ஒன்றுமில்லை நாம் ஒன்றிணைந்து மக்களின் பிரச்சினையை தீர்க்கவே உள்ளோம்.

நாட்டை சீரழித்த திருடர்களை விட்டுக்கு அனுப்ப திசைகாட்டியால் மாத்திரம் முடியும் தெற்கு, மேற்கு,கிழக்கு, வடக்கு, உட்பட ஏனைய மாகணங்ககளில் அனைத்து இன மக்களின் ஒத்துழைப்புடன் ஆட்சியை நடத்த எம்மால் முடியும் அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக இருக்க செயற்படுவோம், பழைமைவாத அரசியலை இல்லாமல் செய்து புதிய அரசியல் பயணத்துடன் பயணிக்க திசைகாட்டியுடன் பயணியுங்கள் என்றார்.

# நாளை ஞாயிறன்று இ.கி. மினின் சிவானந்த நலன்புரி நிலையம் கோட்டகலையில் ஆரம்பம்!

(வி.ரி.சகாதேவராஜா)



இலங்கையில் 96 வருடங்கள் ஜீவ சேவையாற்றிவரும் இராமகிருஷ்ண மிஷினின் மற்றுமொரு சேவை நிலையம் எதிர்வரும் ஐந்தாம் திகதி தைப்பூச தினத்தன்று நுவரேலியா கொட்டகலையில் ஆரம்பமாக இருக்கின்றது. 'சிவானந்த நலன்புரி நிலையம்' என்ற பெயரில் மலையகத்திற்கான முதலாவது சேவைகள் நிலையத்தின் அடிக்கல் நாட்டுவிழா ஞாயிறன்று(5) காலை 9 மணிக்கு இலங்கை ராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி அக்ஷராத்மானந்த ஜீ மகராஜ் தலைமையில் நடைபெற இருக்கின்றது .

அங்கு, கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் சுவாமி ராஜேஸ்வரானந்தா ஜியின் பஜனைகள் வேதபாராயணம் சகிதம் அடிக்கல் நாட்டுவிழா இடம் பெறும். இ.கி.மிஸனின் மட்டக்களப்பு மாநில தலைவர் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் வரவேற்புரை மற்றும் அறிமுகவுரை நிகழ்த்த இருக்கிறார்கள்.

ஹரிங்டன் தோட்டத்தில் அதற்கான நிலத்தை சீமான் விஜயபாலன் செட்டியார் மிஷனுக்கு வழங்கி வைத்து உரையாற்ற இருக்கின்றார். மேலும்,நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.கே.நந்தன கலந்து கொண்டு சிறப்பிக்க இருக்கின்றார்.. பிரதேச விகாராதிபதி திஸ்ஸமகாராமய தம்மஜோதி கலந்து சிறப்பிக்கிறார். இதற்கென்று நாடெங்கிலும் இருந்து இராமகிருஷ்ண மிஷன் பக்தர்கள் அபிமானிகள் கொட்டகலை செல்ல இருக்கின்றனர்.

# பாரம்பரிய நெல்லினங்கள் அறுவடை

(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டம் விவசாயத் திணைக்கள விரிவாக்கல் பிரிவின் பழுகாமம் விவசாய விரிவாக்கல் நிலையத்தின் கீழுள்ள களுமுந்தன்வெளிக் கிராமத்தில் செய்கை பண்ணப்பட்டிருந்த பாரம்பரிய நெல் மற்றும் உபஉணவு பயிற்செய்கை அறுவடை விழா விவசாயப் போதனாசிரியர் பரமேஸ்வரன் சகாப்தனின் ஒழுங்கமைப்பில் வியாழக்கிழமை(02.20203) இடம்பெற்றது.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(காணி) திருமதி.நவரூபரஞ்சினி முகுந்தன், விவசாயத் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் ப.பேரின்பராசா, தெற்கு வலய உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ்.சித்திரவேல், போரதீவுப் பற்று உதவிப் பிரதேச செயலாளர் வி.துலாஞ்சன்,



பாடவிதான உத்தியோகஸ்த்தர்களான திருமதி.லாவன்யா செந்தீபன், என்.லஸ்மன், மற்றும் விவசாயப் போதனாசிரியர்கள், தொழில்நுட்ப உத்தியோகஸ்த்தர்கள், கிராம சேவை உத்தியோகஸ்த்தர், பொதுமக்கள், விவசாயிகள் என பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது ஏற்கனவே அப்பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு அரசாங்கத்தின் அரை மானியத்தித்தின் கீழ் ஒரு கிலோ நெல் 125 ரூபாவிற்கு வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறு அப்பகுதியில 120 ஏக்கரில் செய்கை பண்ணப்பட்டிருந்த பாரம்பரிய நெல்லினமான பச்சைப் பெருமாள், மடத்தவழு, ஆகிய நெல்லினங்;கள் இதன்போது அறுவடை செய்யப்பட்டன.

இந்நிலையில் அப்பகுதியில் சுமார் 25 ஏக்கருக்கு மேல் செய்கை பண்ணப்பட்டிருந்த நிலக்கடலையும் இதன்போது அறுவடை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# நாங்கள் வேறுவேறாக இருந்ததாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பிணைப்பு எங்களுக்குள் இருக்கின்றது

**(கட்சிகளை விமர்சிப்பது தந்தை செல்வா வகுத்த கொள்கைக்கு முறனானது என்கிறார் தமிழரசு முன்னாள் பொதுச் செயலாளர் - கி.துரைராசசிங்கம்)**

(சுமன்)




ஏனைய கட்சிகளை ஏளனம் செய்து விமர்சனம் செய்வது தந்தை செல்வா வகுத்த கொள்கைக்கு முறனானது. நாங்கள் வேறுவேறாக இருந்ததாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பிணைப்பு எங்களுக்குள் இருக்கின்றது என்ற அடிப்படையிலே இந்தத் தேர்தலை முகங்கொடுத்து தமிழ்த் தேசியத்தை நேசிக்கின்ற எல்லாக் கட்சிகளும் ஒன்றாக இருக்கின்றன என்ற விடயம் தென்னகத்திற்குச் சொல்லப்பட வேண்டும் என இலங்கைத் தமிழ் அரசக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் கி.துரைராசசிங்கம் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சிக்கு வாக்களியுங்கள், எங்களுடைய தோழமைக் கட்சிகளுக்கும் வாக்களியுங்கள். எல்லோரையும் வெல்ல வைத்து தமிழர்களின் பலத்தைக்காடடங்கள். அரசாங்கத்துடன் சேர்ந்திருக்கும் கட்சிகளை நிராகரியுங்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இன்றைய தினம் மட்டு ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடடக சந்திப்பின் போதே அவர் இவ்

டது. அந்த யோசனை தொடர்பில் எமக்கு புது உற்சாகம் பிறந்தது. மூன்று கட்சிகளும் முன்று சின்னங்களிலும் முன்நிறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்;கான வாக்குகளைச் சேகரிக்கலாம் என்ற யோசனை முன்வைக்கப்பட்டது. இது தொடர்பில் கொழும்பில் சம்பந்தன் ஐயாவிடம் விளக்கிச் சொன்னோம். அவர்கள் அதனை விளங்கிக் கொண்டார்கள்.

ஆனாலும் எமது கட்சியின் ஒற்றுமை தொடர்பில் ஐயாவினால் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டது. தனித்தனியாகக் கேட்பதையும் பிரிந்துவிட்டதாகவே மக்கள் கருதுவார்கள் தற்போதைக்கு இந்த யோசனை வேண்டாம் என்று தெரிவித்தார். இதே வேளையாழ்ப்பாணக் கூட்டம் முடிவுற்றதன் பின்னர் அதில் அதிருப்தி அடைந்த எங்கள் தோழமைக் கட்சிகள் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவரைச் சந்தித்து உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் வேறாகக் கேட்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாகச் செய்திகள் வந்தன. அதனைத் தொடர்ந்து சம்பந்தன் ஐயா அவர்களைச் சமாதானப்ப

டப்பட்டு இதனை ஆராய்வதற்கு ஒரு குழுவும் நியமிக்கப்பட்டது. இதன்போது தனித்தனியாகப் போட்டியிட்டிருந்தால் இந்த வீழ்ச்சி ஏற்பட்டிருக்காது என்ற விடயமே அனைவராலும் முன்வைக்கப்பட்டது.

அதன் பின்னர் சபைகளிலே ஒவ்வொரு பாதீடுகளை நிறைவேற்றுகின்ற போதெல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல சோதனைகளை அனுபவித்தது. அதனை ஒவ்வொரு விதமாக அணுகி பாதீடுகளை நிறைவேற்றியிருந்தோம். இவ்வாறான நிலமைகள் சென்று கொண்டிருக்கையில் எமது தோழமைக் கட்சிகள் பங்கீட்டின் அடிப்படையில் பெற்றுக் கொண்ட சபைகளை தங்களது சபைகள் என்ற ரீதியில் உச்;சரிக்கத் தொடங்கி விட்டார்கள். இவ்வாறான கருத்துகள் மிகவும் அசௌகரியமானதாக இருந்தது.

இதனைத் தொடர்ந்து 2020ம் ஆண்டு பொதுத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசக் கட்சி பாரிய

வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

2018ம்; அண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இந்த உள்ளூராட்சித் தேர்தல் கலப்பு முறைத் தேர்தலாகும். இதன் போது கடந்த 2018ல் தேர்தலுக்கு முன்னர் எமது தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் மட்டக்களப்பில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இது வட்டாரத் தேர்தல் என்பாதல் கட்சிகளைத் தாண்டி வட்டாரத்தின் பிரசித்தமும் செல்வாக்குச் செலத்தும் என்ற காரணத்தினால் நாங்கள் மூன்று கட்சிகளும் ஒவ்வொரு வட்டாரத்திலும் செல்வாக்குள்ளவர்களை நிறுத்தி அதிக வாக்குகளைப் பெறலாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டு அனைவரும் தோழமைக் கட்சிகளும் ஏற்றுக் கொண்டனர்.

பின்னர் மற்றமொரு கூட்டம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற போது ஏனைய தோழமைக் கட்சிகளின் தலைமைகள் உறுப்பினர்களும் அங்கு வந்திருந்தாகள். நாங்கள் முன்வைத்த பொது வேட்பாளர் விடயம் பொருத்தமானதில்லை என்றும் ஒவ்வொரு கட்சிக்கும் தனித்துவம் உள்ளதென்றும் ஒவ்வொரு கட்சிகளுக்கும் சபைகளைப் பிரித்தொதுக்கி இந்தத் தேர்தலை முகங்கொள்ள வேண்டும் என்று வேட்பாளர் பங்கீடு தொடர்பில் முன்மொழியப்பட்டது. அது தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினராகிய நாங்கள் ஏற்றக் கொள்ளவில்லை. நாங்கள் பொதுவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ரீதியிலேயே வேட்பாளர்களை நிறுத்தவோம், பொதுவாக வேலை செய்வோம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சபைகளாக இவற்றை இயங்கச் செய்வோம் என்ற தீர்மானத்திலேயே இருந்தோம்.

அதற்குப் பின்னர் இந்தக் கலப்பு முறைத் தேர்தலை முகங்கொடுப்பதற்கு வட்டார விகிதாசார விடயங்களை யோசிக்க வேண்டும் என்ற ஒரு யோசனை எனது அலுவலக ரீதியில் முன்வைக்கப்பட்

டுத்தியுள்ளார் என்ற செய்தியும் வந்தது.

இந்தப் பின்னணிக்கு அப்பால் ஒற்றுமை காரணமாக பங்காளிக் கட்சிகளின் கோரிக்கைக்கு இணங்குவது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டு சபைகள் பங்கீடு மேற்கொள்ளப்பட்டது. ஒற்றுமை காரணமான பல விட்டுக் கொடுப்;பின் அடிப்படையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி செயற்பட்டது.

இதனடிப்படையில் வேட்பாளர்கள் நியமிக்கும் போது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்கள் பலர் எமது தோழமைக் கட்சிகளால் நியமிக்கப்பட வேண்டிய நிலை இருந்தது. ஆனாலும் எமது உறுப்பினர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ரீகதியில் சகித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கமைவாக வேட்பாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். வேட்பாளர் அறிமுகக் கூட்டங்களிலும் நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற நிலைப்பாட்டையே வெளிப்படுத்தியிருந்தோம்.

தேர்தல் முடிவடைந்து சபைகள் அமைக்கின்ற போதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ரீதியில் அனைவரும் இணைந்து சபைகளை அமைத்தோம். இந்தக் கலப்பு தேர்தல் முறைடிமையினால் சபைகளை அமைக்கும் போது பல இன்னல்களை எதிர்நோக்கியிருந்தோம. இந்தத் தேர்தல் முறை தொடர்பில் நாங்கள் ஏற்கனவே ஊகித்த விடயங்களும் நடைபெற்ற விடயங்களும் ஒன்றாக இருந்தன. அப்போது நல்லாட்சி அரசாங்கம் இருந்ததன் காரணமாக தேசியக் கட்சிகள் மற்றும் பல சுயேட்சைக் குழுக்களும் ஒன்றிணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சபைகளாக அறுதிப் பெரும்பான்மையுடன் அமைத்தோம்.

இதே வேளை உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் தேர்தலில் ஏற்பட்ட வீழ்ச்சி தொடர்பில் மத்திய குழுக் கூட்டத்தில் கலந்துரையா

பின்னடைவைச் சந்தித்திருந்தது. இது தொடர்பில் சுமந்திரன் அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று கலந்துரையாடினார். இதன்போதும் உள்ளூராட்சி மன்ற நிலைமைகளையே மீண்டும் சொல்லியிருந்தார்கள்.

அதன் பின்னர் முல்லைத்தீவில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் சுமந்திரன் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியகக் கூட்டமைப்பின் கட்சிகள் தனித்தனியக் களமிறங்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார். இது தொடர்பில் அவருக்கெதிராக சுமந்திரன் பிரிக்கப்பார்க்கின்றார் என்ற பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டது. அது சுமந்திரனின் தனிப்பட்ட கருத்து என்றெல்லாம் சொல்லப்ட்டது. ஆனால், இது சுமந்திரனின் தனிப்பட்ட கருத்து அல்ல என்ற விடயம் மேலே கூறப்பட்ட விடயங்களில் இருந்து புரியும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கட்சிகள் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும் என்ற ரீதியில் அனைவருக்கும் அக்கறை இருந்தது. அண்மையில் வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது நானும் கொழும்பிற்குச் சென்ற வேளை எங்களுக்குள் இருக்கும் குழப்பத்தைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தேன். அதற்கு சித்தார்த்தன் அவர்கள் சாதகமான பதிலைத் தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் தங்களுக்குள்ளே விமர்சனம் செய்வதை நிறுத்துவதற்கான நிலைமையொன்றை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்தேன். அதற்கான சந்தர்ப்பம் வாய்ப்பதற்கு முன்பு தற்போதைய உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டு விட்டது.

அதன் பின்னர் இறுதியாக மட்டக்களப்பில் இடம்பெற்ற மத்திய குழுக் கூட்டத்திலே பிரசன்னமாகியிருந்த உறுப்பினர்களிலே 4 பேரைத் தவிர மற்றைய எல்லோரும் இலங்கைத் தமிழ் அரசக் கட்சி தனித்துப் போட்டியிட வேண்டும், மற்றைய கட்சிகளும் தனித்தனியாகப் போட்டியிட வேண்டும் என்ற விடயங்கள் அங்கு வலியுறுத்தப்பட்டது. அந்த விடயங்கள் தோழமைக் கட்சிகளுக்குச் சொல்லப்பட வேண்டும். மூன்று கட்சிகளும் மூன்று சின்னங்களிலே போட்டியிட வேண்டும். மூன்று கட்சிகளும் ஒன்றாகச் சென்று தேர்தல் பரப்புரைகளைச் செய்ய வேண்டும். இதன் போது மூன்று கட்சிகளும் மூன்று சின்னங்களில் கேட்கின்றோம் விரும்பிய சின்னங்களில் ஒன்றுக்கு வாக்களியுங்கள் என்ற வகையிலே நாங்கள் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்ற ரீதயில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஆனால் எங்கள் தீர்மானங்கள் தொடர்பில் கட்சித் தலைவர்களிடையே கலந்துரையாடல் இடம்பெற்றதா இல்லையா என்று தெரியவில்லை. ஆனால் அதற்கு முன்னமே மூன்று கட்சிகளும் பிரிந்துவிட்டன என்றும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கதைகள் அடிபட்டது வேதனையான விடயம். பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காக மாறிவிட்டது என்ற அதிருப்தி கட்சியிலே பற்றுக் கொண்ட பலருக்கு இருக்கின்றது.

குரங்காக மாறியதை மீண்டும் உருட்டி எடுத்து பிள்ளையாராக ஆக்கிவிட முடியும். இந்தத் தேர்தல் முடிந்ததன் பிறகு இருந்தபடியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் வர வேண்டும் என்று நாங்கள் நினைக்கின்றோம். ஏனெனில் தேர்தல் முடிந்த பின்னர் சபைகள் அமைக்கின்ற போது நிச்சயமாக ஒருவரின் உதவி மற்றையவருக்குத் தேவைப்படும். அந்த நேரத்திலே தற்போதுள்ள நிலைமைகளை மறந்து நாங்கள் ஒன்றாகச் சேரும் வாய்ப்பு இருக்கின்றது. எங்களுடன் இயங்கிக் கொண்டிருந்த ஜனநாயகப் போராளிகளும் இந்த ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பிலே சேர்ந்து விட்டார்கள் என்ற செய்தி கவளையளிக்கின்றது.

தமிழ்த் தேசியக் கொள்கையை முன்னெடுக்கின்ற கட்சிககள் வெறுமனே அரசியற் கட்சிகள் அல்ல. அவை விடுதலை இயக்கங்கள். விடுதலை இயக்கத்தின் ஒரு பணியாகவே அரசியல் நடைபெறுகின்றது. எனவே இந்த விடுதலையை முற்கொண்டு செல்ல வேண்டுமாக இருந்தால் நாங்கள் நிச்சயமாக ஒற்றமையாக இருக்க வேண்டும்.

ஒற்றுமை என்பதில் பல பிரச்சனைகள் இருப்பது அனைவருக்கும் தெரியும். அதிலும் வெவ்வேறு அணுகுமுறைகளில் செயற்பட்டவர்களிடையே ஒற்றுமை என்பது கடினமான விடயம் தான். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அகிம்சை வழியிலே இருந்தது. ஏனைய கட்சிகளெல்லாம் மறவழிகளில் போராடியவர்கள். அவர்கள் செய்த வீரதீரச் செயல்களையெல்லாம் யாரும் மறுக்க முடியாது. எனவே அவர்கள் தொடர்பான விடயங்களைச் சொல்லி அவர்களை ஏளனம் செய்து விமர்சனம் செய்வது தந்தை செல்வா வகுத்த கொள்கைக்கு முறனானது. எனவே இதில் யாராக இருந்தாலும் ஏனைய கட்சிகளை விமர்சனம் செய்ய வேண்டிய அவசியமில்லை. விமர்சிக்கவும் கூடாது இதுவரை செய்திருந்தால் அவற்றை நிறுத்திவிட வேண்டும். நாங்கள் வேறுவேறாக இருந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பிணைப்பு எங்களுக்குள் இருக்கின்றது என்ற அடிப்படையிலே இந்தத் தேர்தலை முகங்கொடுக்க வேண்டும்.

இங்கிருக்கின்ற தமிழ்த் தேசியத்தை நேசிக்கின்ற எல்லாக் கட்சிகளும் ஒன்றாக இருக்கின்றன என்ற விடயம் தென்னகத்திற்குச் சொல்லப்பட வேண்டும். அந்த அடிப்படையில் அடுத்த கட்டத்தை அரசாங்கத்தோடு தீர்வு தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான பலத்தை அனைவரும் காட்ட வேண்டும்.

நான் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவன் என்பதால் தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்குமாறு மக்களைக் கேட்கின்றேன். எங்களுடைய தோழமைக் கட்சிகளுக்கும் வாக்களியுங்கள். எல்லோரையும் வெல்ல வைத்து தமிழர்களின் பலத்தைக் காட்டுங்கள். அரசாங்கத்துடன் சேர்ந்திருக்கும் கட்சிகளை நிராகரியுங்கள் என்று தெரிவித்தார்.

# தமிழரசுக் கட்சி வகுத்த திட்டம் சரியானது எனும் உண்மை வெளிப்படும்- ஸ்ரீநேசன்





(ரக்ஸனா)



இலங்கை தமிழ் அரசுக் கட்சி அதன் பங்களிக்கட்சிகளுடன் இணைந்து தென் இலங்கைக் கட்சிகளின் துணை இல்லாமல் வடக்கு கிழக்கில் உள்ள பெரும்பாலான சபைகளை கைப்பற்றும் என்றும் அதன்போது தமிழரசுக் கட்சி வகுத்த திட்டம் சரியானது எனும் உண்மை வெளிப்படும் என்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் (ஞாயிற்றுக்கிழமை) (29.01.2023) நடைபெற்ற இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு தொகுதிக்கான வேட்பாளர் அறிமுக கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார். அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

இந்த நாட்டு மக்களுக்கு மின்சாரம், எரிபொருள், மருந்துப் பொருட்கள் என அத்தியவசிய பொருட்களை தர முடியாத மொட்டுக் கட்சியினர் இம்முறை தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காக கிழக்கில் படகு சின்னத்திலும், வடக்கில் வீணை சின்னத்திலும் போட்டியிடுவதாக பசில்ராஜபக்சவே அறிவித்துள்ளார்.

ஒரு ஏக்கரில் 20 மூடைகள் விளைந்தால் ஓர் மில்லியனர் ஆகலாம் என கடந்த வருடம் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருந்தார். ஆனால் தற்போது இந்நாட்டில் குடிமகன் ஒருவருக்கான கடன் தொகை ஒரு மில்லியனாக அதிகரித்துள்ளது. அதாவது மறை கணியமாக அவரது கருத்துக்கு மாறாக இடம்பெற்றுள்ளது.

கிழக்கை பாதுகாப்போம் என ஆட்சிக்கு வந்தவர்கள் மயிலத்தனமடு, மாதவனை, கெவிலியாமடு, நெடியகல் மலை என தமிழர்களின் பூர்வீக இடங்கள் ஆக்கிரமிக்கப்பட்ட போது வேடிக்கை பார்த்துக் கொண்டே இருந்தார்கள், இறுதியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுத்த சட்ட நடவடிக்கையின் காரணமாகவே அவை பாதுகாக்கப்பட்டன.

நாங்கள் எந்தவொரு நிலையிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளை அரவணைத்து செல்லவே முயல்கின்றோம், இம்முறை உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் இலங்கை தமிழரசுக் கட்சி அதன் பங்காளிக் கட்சிகளுடன் இணைந்து தென் இலங்கைக் கட்சிகளின் துணை ஏதும் இல்லாமல் வடக்கு கிழக்கில் உள்ள பெரும்பாலான சபைகளை கைப்பற்றும். இந்த முடிவுகளிலிருந்து தமிழரசுக் கட்சி தனித்து கேட்க வேண்டும் என வகுத்த திட்டம் சரியானது எனும் உண்மை அனைவருக்கும் வெளிப்படும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பாளர்கள் உள்ளிட்ட கட்சியின் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# ஆலையடிவேம்பில் போதை பொருள் வியாபாரிகளால் இடம்பெற்றுவரும் சட்டவிரோத செயற்பாடுகளை நிறுத்தகோரி- ஆர்ப்பாட்டம்!




(ம.கிரிசாந்)

அம்பாறை ஆலையடிவேம்பு பிரதேசத்தில் போதை பொருள் வியாபாரிகளினால் இடம்பெற்றுவரும் போதை பொருள் வியாபாரம் சட்டவிரோத சூதாட்ட நிலையம் ஆசிரியர் மீது அச்சுறுத்தல் போன்ற சட்டவிரோத செயற்பாடுகளை நிறுத்த கோரி பொதுமக்கள் பிரதேச செயலகத்தின் முன்னாள் வெள்ளிக்கிழமை (3) கவனயீர்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதேச சமூக மட்ட அமைப்புக்கள் ஆலையங்கள் ஒன்றினைந்து இந்த கவனயீர்பு போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தனர் இதனையடுத்து பிரதேச செயலகத்தின் முன்னாள் நூற்றுக்கு மேற்பட்ட பொது மக்கள ஒன்றிணைந்தனர்.



இதன் போது அண்மைக்காலமாக போதை பொருள் வியாபாரிகளால் பல கொள்ளைச் சம்பவங்கள் சட்ட விரோத செயற்பாடுகள் அதிகரித்துள்ளதுடன் இப்பிரதேசத்தில் வாழும் நீதிபதி ஒருவரது வீட்டில் இடம் பெற்ற கொள்ளைச் சம்பவம், நீதிமன்ற ஆவணங்களை அழிக்கும் போக்கில் பதிவேட்டறையை தீ வைத்தமை, பிரதேச செயலாளருக்கு நேரடியாக விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல், பாடசாலை ஆசிரியர்கள் மீதான கொலை அச்சுறுத்தல், சூதாட்ட விடுதிகள் அதிகரித்துள்ளது

இவ்வாறான தொடர் சம்பவங்களினால் பிரதேசத்தின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளதாகவும் இதனை தடுக்க பொலிசார் ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுக்கவில்லை குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களை கைது செய்யாமை, போன்ற செயற்பாடுகள் காரணமாக பொலிசார் மீது அவநம்பிக்கையினை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளதுடன் மறைமுக ஆதரவை பொலிசார் இவர்களுக்கு வழங்குகின்றனரா?

பிரதேசத்தில் சூதாட்ட மையங்கள் இயங்கிவருவது தொடர்பான தகவல்களை மக்களால் வழங்கப்படுகின்றபோதும் பொலிசார் உரிய நடவடிக்கை எடுக்காமல் இருப்பது சட்டவிரோத செயற்பாடுகளை இப்பிரதேசத்தில் ஊக்குவிப்பது போன்ற தோற்றப்பாட்டை உருவாக்கியுள்ளது

பொலிஸ் உயர் அதிகாரிகள் அக்கறை கொண்டு அக்கரைப்பற்று பொலிசாரை இவ்விடயத்தில் கவனம் செலுத்தி சட்டவிரோத செயற்பாடுகளை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடுவர்களுடன் நெருங்கிய தொடர்புடைய உறவை பேணும் பொலிசாரை உடனடியாக இடமாற்றம் செய்யவும் கோரிக்கை விடுப்பதாகவும்

பாடசாலை மாணவர்களுக்கு போதை பொருள் வழங்கும் வியாபாரத்தை நிறுத்து, போதை பொருள் வியாபரிகளால் ஆசிரியர்கள் மீது விடுக்கப்படும் அச்சுறுத்தலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும், தனிநபர் சட்டவிரோத செயற்பாடுகளை ஒழிக்க நடவடிக்கை எடுக்கவும் என்ற வாசகங்கள் கொண்ட சுலோகங்கள் ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

இதனை தொடர்ந்து ஜனாதிபதி; பொலிஸ் மா அதிபர் மற்றும சம்மந்தப்பட்ட் அதிகாரிகளுக்கான மகஜரை ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரனிடம் ஆர்ப்;பாட்டத்தில் ஈடுபட்வர்கள் வழங்கிய பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.





(சுமன்)

காரைதீவில் போட்டியிடும் புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியின் சார்பிலான சுயேற்சைக் குழு வேட்பாளர்கள் அறிமுகம்...

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு பிரதேச சபையில் சுயேட்சைக் குழு 1ல் அன்னாசிப் பழம் சின்னத்தில் போட்டியிடும் புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியின் வேட்பாளர் அறிமுக ஊடக சந்திப்பு இன்றைய தினம் காரைதீவில் இடம்பெற்றது.

புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் க.இன்பராசா தலைமயில் இடம்பெற்ற இவ்ஊடக சந்திப்பில் கட்சியின் பிரதான வேட்பாளர் செல்வநாயகம் ரசிகரன் உட்பட வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது சுயேட்சைக் குழுவின் வேட்பாளர்களான ஆ.ஆனந்தசபேசன், க.கோணேசமூர்த்தி, சி.மோகனா, மு.யோகநாதன், பொ.சுசிகலா, மூ.செல்வநாயகம், ஜீ.சிந்துஜா, தி.ஹரிபிரசாத், சி.சந்திரவதனி, ம.மேகலா, ந.கேமானந், இ.ரக்சனா, சீ.பிறேமா ஆகியோர் இன்றைய தினம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு மறைமாநில 8வது பேராயர் மண்ணுலக வாழ்விலிருந்து விடைபெற்றார்



(வாஸ் கூஞ்ஞ)

இலங்கையின் எட்டாவது கொழும்பு மறைமாநில ஓய்வுநிலை பேராயர் மேதகு முனைவர் ஒஸ்வல்ட் கோமிஸ் தனது 90 வது வயதில் இறைவனடிச் சேர்ந்தார்.

சுகவீனமுற்ற நிலையில் 03.02.2023 இறைவனடி சேர்ந்த ஆண்டகை அவர்கள் 1932 ஆம் ஆண்டு கம்பஹா மாவட்டம் களனியில் பிறந்தடர்.

1958 ஆம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். 1968 ஆம் ஆண்டு கொழும்பு மறைமாநிலத்தின் துணை ஆயராக அருட்பொழிவு செய்யப்பட்டு 27 ஆண்டுகள் பணியாற்றிய பிறகு 1995 ஆம் ஆண்டு அநுராதபுரம் மறைமாவட்ட ஆயராக நியமிக்கப்பட்டார்.

மேலும் கடந்த 2002 ஆம் ஆண்டு கொழும்பு மறைமாநிலத்தின் பேராயராக நியமிக்கப்பட்டு 2009 ஆம் ஆண்டு வரை பணியாற்றி ஓய்வு பெற்ற நிலையிலேயே ஆண்டகை தனது இவ்வுலக வாழ்க்கையிலிருந்து விடைபெற்றுள்ளார்.

# நாட்டு மக்கள் அனைவரும் சுதந்திரமாகவும் சமத்துவ உரிமைகளுடன் வாழும் வகையில் தேவையான நடவடிக்கைகள் மேற்கோள்ளப்படும்

## அமைச்சர் டக்லஸ் திருமலையில் தெரிவிப்பு





(ஹஸ்பர்)

75வது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு வெள்ளிக்கிழமை (03) திருகோணமலை கோணேஸ்வரம் ஆலயத்தில் நாட்டுக்கும், ஜனாதிபதிக்கும் நாட்டு மக்களுக்கும் ஆசி வேண்டி இந்து சமய விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றது. பிரதம அதிதிகளாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் அவர்களும் கலந்து கொண்டனர்.

நாட்டு மக்கள் அனைவரும் சுதந்திரமாகவும் சமத்துவ உரிமைகளுடன் வாழும் வகையில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் தமிழ்பேசும் மக்கள் மற்றும் ஏனைய மக்களினுடைய அரசியல் உரிமைகளை பாதுகாத்து , அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் காணி விடயங்கள் குறித்து கவனம் செலுத்தி அவற்றை தீர்க்க வழிசமைக்கப்கடும் என்று ஜனாதிபதி தம்மிடம் தெரிவித்ததுடன் குறித்த விடயத்தை மக்களுக்கு உறுதியாக எடுத்துரைக்குமாறும் அவர் குறிப்பிட்டதாக இதன் போது கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இன்று மேற்கொள்ளப்படும் இப்பூஜை வழிபாடுகள் நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்கு ஆசி வேண்டுவதாக காணப்படுகின்றது. அந்த வகையில் அனைத்து மதங்களின் ஆசியும் இதற்காக வேண்டப்படுவதுடன் அது முன்னெடுக்கப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியை தீர்க்கும் வகையில் நிலையான திட்டங்கள் வகுத்து செயற்படல் மூலம் அதனை வெற்றி கொள்ள முடியும்.

சுதந்திர தின கொண்டாட்டம் மூலம் சர்வதேசத்திற்கு எமது நாட்டின் பன்மைத்துவ சமூகங்களின் ஐக்கியத்தை வெளிக்கொணரக்கூடியதாக அமையும். பௌத்த விழுமியங்களை பெரும்பான்மையாக கொண்ட இந்நாடு ஏனைய இனங்களை சேர்ந்த மக்களது பண்பாடு மற்றும் கலாசாரங்களை பேணி எவ்வாறு ஒருமித்த அடிப்படையில் செயற்படுகின்றது என்பதை உலகிற்கு எடுத்துக்காட்ட சிறந்த சந்தர்ப்பமாக இந்நிகழ்வு அமையப்பெற்றுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் இதன்போது தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர். எம். பி.எஸ்.ரத்னாயக்க, திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி. எச். என். ஜயவிக்ரம, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அனிருத்தனன், பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பி. தனேஸ்வரன், குச்சவெளி பிரதேச செயலாளர் கே. குணநாதன், ஆலய பரிபாலனசபை உறுப்பினர்கள், பக்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# தமிழின் அழகு என்னை ஈர்த்தது! தமிழ்ப்பேராசிரியரான சீனப்பெண் கூறுகிறார். ஜாங்ச்சீயை நிறைமதி ஆக்கிய தமிழ்!

**(விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா காரைதீவு)**

உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் பற்றி அகில உலகமும் அறியும். அவர் பிறப்பால் ஓர் இந்து. ஒரு தமிழர். தாய்மொழி தமிழ். ஆரம்பக் கல்வியும் தமிழில். தமிழில் ஆராய்ச்சி. இது தெரிந்ததே.

ஆனால் இந்த பின்புலம் ஒன்றுமே இல்லாமல் சீனப் பெண் ஒருவர் தமிழில் காதல் கொண்டு தமிழைக் கற்று தமிழ் பேராசிரியராக பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவராக உயர்ந்திருக்கிறார் என்றால் நம்ப முடிகிறதா?

நம்பத்தான் வேண்டும். இதோ ஆதாரம். அவருடனான நேர்காணல்.

சீன மக்கள் தற்போது தமிழ் மொழியை கற்பதில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். சீன பல்கலைக்கழகங்களில் தமிழ் மொழிக்கென தனியான துறைகள் காணப்படுகின்றன.

இந்த நிலையில் சீனாவின் யுனான் மிஞ்சு பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி உலகளவில்வளர்ச்சி அடைந்து வருவதற்கான தமிழ் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த உலக அளவில் தமிழ் மொழிக்கு சீன மக்கள் பெரும் சேவையை ஆற்றி வருகின்றனர் என்றால் அது மிகையாகாது.

தமிழ் மொழி மீது கொண்ட பற்று காரணமாக தனது சீனப் பெயரையும் இவர் தூய தமிழில் நிறைமதி என்று மாற்றிக் கொண்டுள்ளார் இந்த பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழிக்கான தனியான துறைகள் காணப்படுவதுடன் தமிழ் மொழி துறையின் தலைவராக நிறைமதி என்னும் சீனப்பெண் விளங்குகின்றார் இவர் ஒரு பேராசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது இவரது தமிழ் மொழி துறையில் தமிழ் பண்டிகைகளும் கொண்டாடப்படுகின்றமை விசேட அம்சமாகும் கடந்த காலங்களில் இந்த தமிழ் துறையில் தைப்பொங்கல் பண்டிகை விமர்சையாக கொண்டாடப்பட்டுள்ளது.

இவரிடம் தமிழ்மொழி பயின்ற சீன மாணவர்கள் உலக அளவில் தமிழ் பணி ஆற்றுகின்றனர்.

மலைகள் தாண்டி மதுரை பயணத்தில் சீனப் பெண்ணின் பண்பாட்டு தேடல் என்னும் தமிழ் நூலையும் நிறைமதி எழுதியுள்ளார்.



சீன இலங்கை நட்புறவின் பின்னர் சீனர்கள் தமிழ் மொழியை கற்பதில் மிகுந்த ஆர்வம் உடையவர்களாக காணப்படுகின்றனர் இந்த வகையில் சீனப் பெண் ஒருவர் தமிழ் அறிஞராக பேராசிரியராக மாறியுள்ளதுடன் தமிழ் துறை தலைவராக யுன்நொன் மிஞ்சு பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வருகின்றார் தமிழில் பற்று கொண்டதன் காரணமாக அவரது பெயரையே நிறைமதி என மாற்றியுள்ளார் அந்த அளவிற்கு அவரது தமிழ் பற்று காணப்படுகின்றது என்றால் மிகை ஆகாது. இந்த நூல் இந்தியாவில் பெரும் வரவேற்பு பெற்றுள்ளது. தமிழ்த்துறைப் பேராசிரியர் நிறைமதியுடனான செவ்வி இதோ..

**1. தமிழ் மொழி மீது உங்களுக்கு எப்படி ஆர்வம் ஏற்பட்டது?**

தமிழ் மொழி எனது பல்கலைக்கழகத்தின் இளங்கலை பட்டம் .நான் அயல் நாட்டு மொழி படிப்பதில் ஆர்வம் கொண்டவர். பல்கலைக்கழகத்தில் என்ன படிக்கப் போகிறேன் என்று பட்டம் தேர்ந்தெடுத்த போது பல அயல் மொழிகளில் தமிழ் பார்த்தேன் .இது பற்றிய தகவல் இணையத்தில் தேடிப் பார்த்தேன். ஒரு கட்டுரையில் தமிழ் மொழி உலகில் மிக தொன்மையான செம்மொழிகளில் ஒன்று என்றுகூறியது. பிறகு அக்கட்டுரையில் தமிழ் எழுத்துக்கள் காட்டியது. இந்த அற்புதமான எழுத்துக்களை பார்த்த போது மலர்கள் போல் ஆகின்றன என்று வியந்து சொன்னேன்.

இது நிச்சயமாக ஒரு சிறப்பான மொழி என்று நினைத்து இது எனது பல்கலைக்கழகத்தின் பட்டமாக தெரிவு செய்தேன். தமிழ் மொழி சீன மொழியை விட மிகவும் வித்தியாசமானது முதலில் இதைப் படிப்பது எனக்கு கடினம். ஆனால் படிக்கப் படிக்க இதன் மீது ஆர்வம் அதிகரித்தது . உங்கள் பேராசிரியர்கள் கவிதை தமிழ் பாடல் தமிழ் திரைப்படங்கள் முதலியவற்றை எங்களுக்கு அறிமுகப்படுத்தினார்கள். அவற்றில் கண்டுபிடித்துள்ள தமிழின் அழகு என்னை ஈர்த்துள்ளது நாளுக்கு நாள் தமிழ் என் வாழ்க்கையில் முக்கியமான பகுதியாக மாறியது.

**2. தமிழ் மொழி தொடர்பாக உங்கள் குரு யார்?**

தமிழ்மொழி உலகிற்கு எண்ணெய் கூட்டிக்கொண்டு சென்று எனக்கு வழிகாட்டியவர் எனது பேராசிரியர் சூன் கோச்சியாங் அவர்கள் தான். அவர் முன்னாள் சீன வானொலியின் தமிழ் பிரிவின் தலைவர் .வானொலி நிலையத்திலிருந்து ஓய்வு பெற்ற பிறகு எங்கள் பேராசிரியராக பணிபுரிய தொடங்கினர் .அப்போது வயதாகி விட்டு உடல்நிலை மோசமாகி விட்டாலும் அவர் உறுதியுடன் தினமும் ஒரு மணி நேரம் சுரங்கப்பாதையின் மூலம் வீட்டிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு வந்து வகுப்பு எடுத்தார். இலங்கையில் தமிழ் படித்த அவர் அடிக்கடி இலங்கையின் அழகை இயற்கை காட்சிகளை எங்களுக்கு அறிமுகப்படுத்தினார் . எங்கள் தமிழ் படிப்பில் கடும் கவனம் செலுத்தி கடுமையாகவும் உன்னிப்பாகவும் இருந்தார். அவர் எங்களுக்கு அடிக்கடி கூறியதாவது தமிழ் செம்மொழி நன்றாக படியுங்கள் .படிப்பு முடிந்த பிறகு தமிழ் பணி செய்யுங்கள் என்றார் .அவரது தமிழ் பற்று எனக்கு பெரிதும் செல்வாக்கு செலுத்தியது. அவர் கூறியது போலவே இரு மக்களுக்கிடையே நட்பு பாலமாக தமிழ் பணி செய்ய வேண்டும் என்ற கனவிற்கு நான் முயற்சி செய்கிறேன். தற்போது பேராசிரியராக நானும் எனது பேராசிரியர் சூன் அவர்களின் பொறுப் புணர்ச்சி கொண்டு மாணவர்களின் மேல் பாசமாக இருந்து உன்னிப்பாக வேலை செய்கிறேன்.

**3. அதிகளவான மக்கள் சீனாவில் தமிழ் மொழி பயில்கிறார்கள் இது பற்றி கூறுங்கள்?**

சீனாவில் யுன்னோன் மிஞ்சு பல்கலைக் கழகம் உட்பட மூன்று பல்கலைக்கழகங்களில் தமிழ் துறை அமைந்துள்ளது உண்மையாக கூறினால் சீனாவில் தமிழ் படிப்பவர்களின் எண்ணிக்கை அதிகம் இல்லை சிறப்பாக ஆங்கிலம் பிரான்சு ஸ்பானிஷ் போன்ற மொழிகளை விட சீனாவில் தமிழ் கல்வி தொடக்க நிலையில் இருக்கிறது ஆகவே இதைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் பேராசிரியர்கள் மற்றும் சீனர்களுக்கென தமிழ் பாடல் நூல்கள் தேவை ஆய்வு வளம் கருவிகளும் தமிழ் கல்வி வளர்ச்சிக்கு தேவைப்படுகின்றன



அண்மைக்காலத்தில் தமிழ் மொழியின் சிறப்பு சீனர்களுக்கு தெரிந்து கொண்டுள்ளது சிறப்பாக சீனாவின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள ஸ்வான்சேவ் நகரத்தில் தமிழ் மொழி கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு தமிழ்நாட்டுக்கும் சீனர்களுக்கும் இடையே பண்டைக்காலம் தொட்டு தொடங்கியது என்று மக்களுக்கு தெரிந்தது சீன அரசுத் தலைவர் சி ஜிங் பிங் தமிழ் நாட்டில் இந்திய பிரதமர் மோடியுடன் சந்தித்து கலந்துரையாடினர் அப்போது முதல் தமிழ் சீடர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது அப்போது எனது நண்பர்கள் பலர் என்னிடம் கேட்டது தமிழ் மொழி எப்படி யான மொழி தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் பயணம் செய்வது எப்படி என்றார்கள் நான் அப்போது நம்ம தமிழ் இப்படியாக மகிழ்ச்சியுடன் பதில் அளித்தேன் ஆய்வுக் கட்டுரை எழுதுவது தமிழ் பண்பாட்டு நிகழ்ச்சிகள் முதலியவற்றின் மூலம் சினர்களுக்கு இந்த அழகான மொழி பண்பாட்டை அறிமுகம் செய்ய வேண்டும் என்று எங்கள் தமிழ் துறையின் பணித்திட்டமாகும்.

**4. உங்கள் பல்கலைக்கழக தமிழ் துறை குறித்து கூறுங்கள்?**

எங்கள் பல்கலைக்கழகத்தின் பெயர் யுன்னோன் மின்சு பல்கலைக்கழகம் இது சீனாவின் தென்மேற்கு பகுதியில் உள்ள யுன்னோன் மாகாணத்தில் இருக்கிறது. எங்கள் பல்கலைக்கழகத்தில் 201% ஆம் ஆண்டு தமிழ் துறை ஆரம்பித்தது தமிழ் தவிர சிங்களம் ஹிந்தி நேபாளி தாய் கம்போடியன் மலாய் வியட்நாம் முதலிய தெற்காசிய மற்றும் தென்கிழக்காசிய நாடுகளின் மொழித்துறை கற்பிக்கப்பட்டன. இங்கே இளங்கலை மற்றும் சில முதுகலை வகுப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போது தமிழ் துறையில் நான் தலைவராக பணிபுரிகிறேன். தவிர வேறொரு சீன விரிவுரையாளர் மற்றும் தமிழ் பேராசிரியர் இங்கு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை மாணவர்களை சேர்ப்போம் இப்போது பத்து மாணவர்கள் நான்கு ஆண்டுகால இளங்கலை தமிழ் படித்துக் கொண்டிருக்கிறார்கள் மாணவர்கள் தங்கள் படிப்பின் மூன்றாம் ஆண்டில் இலங்கை அல்லது இந்தியாவிலுள்ள சிறந்த பல்கலைக்கழகத்தில் ஓராண்டு தமிழ் படிக்கத் திட்டம் வகுத்துள்ளோம் முன்பு மாணவர்கள் இந்தியாவில் எஸ் ஆர் எம் பல்கலைக்கழகத்தில் படித்தார்கள் பிறகு இலங்கையில் உள்ள களனி பல்கலைக்கழகம் போன்ற சிறந்த பல்கலைக்கழகத்துடன் ஒத்துழைத்து மாணவர் மற்றும் பேராசிரியர் பரிமாற்றம் செய்வோம்.

**5. நீங்கள் எழுதியுள்ள நூல் பற்றி கூறுங்கள்?**

நான் 2019 ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் 27 நாட்களாக படிப்பு பயணம் மேற்கொண்டேன் பயணத்தில் அற்புதமான தமிழ் பண்பாட்டையும் தமிழர்கள் எப்படி விருந்தினர்கள் வரவேற்கின்றார்கள் என்பதையும் நேரில் கண்டு அனுபவித்தேன் அங்குள்ள பேராசிரியர் சத்தியமூர்த்தி அவர்களின் மும்மொழியில் நான் அங்கு தங்கிய போது நாட்குறிப்புக்கள் தினமும் குறித்து விட்டேன். திரும்பிய பிறகு எனது நண்பர் ராஜேஷ் குமார் அவருடன் பேசிய போது அவரால் உதவி செய்து வெளியிட முடியும் என்று சொல்லி அந்நாள் குறிப்பை முயற்சியுடன் நூலாக வெளியிட்டார் அத்துடன் மலைகள் தாண்டி சீனப்பெண் பண்பாட்டுத் தேடல் எனும் பெயரின் நூலுக்கு கொடுத்தார். அந்த நூலில் பயணத்தில் பார்த்ததும் கேட்டதும் குறித்து எனது உணர்ச்சிகளை எழுதினேன் தமிழர்களின் அன்பாலும் தொலைத்தோம்பலும் தனியாக வெளிநாட்டில் இருந்த போது கொஞ்சமும் தனிமை உணர்வை உணர்ந்ததில்லை. அந்த மறக்க முடியாத நினைவுகளை அந்த நூலில் எழுதியுள்ளேன். மீண்டும் தமிழ்நாட்டிற்கு பயணம் செய்ய ஆசைப்படுகிறேன் இலங்கையின் கொழும்பு யாழ்ப்பாணம் கண்டி முதலிய நகரங்களில் பயணம் செய்யவும் திட்டம் இருக்கிறது அப்போது வேறொரு பயணம் நூல் எழுத ஆசைப்படுகின்றேன்.

**6. தமிழ் மொழி மீதான உங்கள் இலட்சியம் என்ன?**

தமிழ் கல்வி மொழிபெயர்ப்பு பணியாகியவை எனது தமிழ லட்சியம் முதலில் மென்மேலும் மாணவர்களை சேர்த்து அவர்களுக்கு நல்ல தமிழ் சொல்லிக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு தமிழின் மீதான ஆர்வம் அதிகரிக்க வேண்டும். படிப்பு முடிந்த பிறகு தமிழ்ப்பணி செய்ய உக்கமளிப்பேன். மாணவர்கள் நன்றாக தமிழ் மொழி மூலம் இரு மக்களுக்கும் தொண்டு செய்ய வேண்டும் என்பது எங்கள் கல்வியின் நோக்கம்.

சிறந்த தமிழ் இலக்கியம் சீன மொழியில் மொழிபெயர்ப்பு செய்வது எனது கனவும் கடமையும் தற்போது செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் ஆதரவில் மணிமேகலையை சீன மொழியில் மொழிபெயர்த்துக் கொண்டிருக்கிறேன் இது கடினமாக இருந்தாலும் மணிமேகலையின் அழகை இந்த வாய்ப்புக் கொண்டு மேலும் புரிந்து கொண்டுள்ளேன். இந்தக் கட்டுரை கொண்டு செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கும் பேராசிரியர் குறிஞ்சி வேந்தன் அவர்களுக்கும். நண்பர் ராஜேஷ் குமார் அவர்களுக்கும், எனக்கு மணிமேகலை சொல்லிக் கொடுத்துள்ள பேராசிரியர் ராமமூர்த்தி அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கின்றேன். பிறகு, தொல்காப்பியம் ஆராய்ந்து மொழிபெயர்க்கத் திட்டம் இருக்கிறது.

இவை தவிர ஆய்வுக் கட்டுரைகள் சிறப்பு நிகழ்ச்சிகள் மூலம் கீழடி போன்ற சிறப்பு வாய்ந்த அம்சங்கள் சீனாவில் மேலும் அறிமுகப்படுத்துவேன். மாணவர்களுடன் இணைந்து தமிழ் மொழி பண்பாட்டை சீனாவில் பரப்ப போகிறோம். மென்மேலும் சீனர்கள் தமிழை ரசித்து தமிழ் வரலாற்றை புரிந்து தமிழ் மொழி படிக்க தமிழ் பணியில் கலந்து கொண்டு சீன தமிழ் நட்பை அதிகரிக்க வேண்டும் என்பதற்கும் முயற்சி செய்கிறேன்.

**7. உங்கள் பல்கலைக்கழகம் பற்றி கூறுங்கள்?**

எங்கள் பல்கலைக்கழகம் யுன்னோன் மின்சு பல்கலைக்கழகம் 1951 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. மிஞ்சு என்பது சீன மொழியில் தேசிய இனம் என்று பொருள் ஏனென்றால் முக்கியமாக சீனாவில் சிறுபான்மை தேசிய இனங்களைச் சேர்ந்த மாணவர்களை இப்ப பல்கலைக்கழகம் சேர்த்துள்ளது. எடுத்துக்காட்டாக எங்கள் வகுப்பில் பத்து மாணவர்களில் பாதிக்கு மேலான மாணவர்கள் சிறுபான்மை தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள் தத்தமது இனத்தின் மொழி மற்றும் பண்பாட்டை மதித்து நேசிக்கும் என் மாணவர்கள் தமிழினத்தின் மொழி பண்பாட்டை கற்றுக் கொள்ளும் போது இதன் சிறப்பையும் அழகையும் மேலும் கண்டுபிடித்து புரிந்து கொள்ளலாம் எங்கள் பல்கலைக்கழகம் தமிழ் உட்பட மொழித் துறையின் வளர்ச்சிக்கு முக்கியம் அழித்து வருகிறது இங்கு பயின்றுள்ள மாணவர்கள் பரிமாற்ற தூதராக பன்னாட்டு மக்களுக்கு தொண்டு செய்யுமாறு பல்கலைக்கழகம் கூறுகிறது.

